**<u>S.C.No. 19/2022 அ.சா.20 – கோபாலகிருஷ்ணன் 05.08.2025</u>**

**(1** ம் எதிரி கனகராஜ் ஆஜர்) **(2** ஆம் எதிரி இறப்பு**)**

(3 ஆம் எதிரி P.T வாரண்ட் மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்.)

4 மற்றும் 5 எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அவர்கள் அடையாளத்தை பற்றி ஆட்சேபனை தெரிவிக்கப்படாததால் நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது**).**

<u>**Crl.M.P.Nos.1485/2024** மற்றும் **1486/2024**ல் கடந்த **17.12.2024** அன்று பிறந்த உத்தரவின்பேரில் அ.சா.**20** சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு**, 1, 3** முதல் **5** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

<u>ஆரம்பிக்கும் நேரம் **4.00** மணி</u>

அ.சா.2 ஜெயராஜ் என் தம்பி கடைக்கு அருகே கறிக்கடை இருந்ததாக சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை. என் தம்பி 2018 ஆம் வருடத்திற்கு முன்பு தனக்கும், தன் மனைவிக்கும் இடையே பிரச்சனை உள்ளதாக உங்கள் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.2 உங்கள் விசாரணையின்போது தன் தம்பி அவர் மனைவியை அடித்து தம்பி மனைவி காதில் இருந்த கம்மல் நெழிந்துவிட்டது என்று கூறியுள்ளாரா என்றால் கூறவில்லை. அவர் தம்பிக்கும், அவருடைய தம்பி மனைவிக்கும் பிரச்சனை ஏற்பட்டு ஊரை விட்டு சென்றுவிட்டார் என்று எனது விசாரணையில் கூறியுள்ளாரா என்றால் கூறவில்லை. தம்பி மனைவி கோவிலுக்கு வரும்போது

குழந்தைகளுடன் வந்து செல்வார் என்று எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.3 செந்தில்குமார் என் தம்பியை பெங்களூர், ஆந்திரா போன்ற இடங்களில் தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை என்று சொல்லவில்லை என்றால் சரிதான். பெங்களூரில் என் தம்பி சிறு வயது முதல் வேலை பார்க்கிறார் என்று உங்கள் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். ஆந்திராவில் இனிப்பு கடை நடத்தி வருவதாக கூறி தேடியதாக உங்கள் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். என் தம்பி மனைவி அழகுலட்சுமி தன் அம்மாவிடம் சென்று சொத்து கேட்டார் என்றும், என் தம்பி என் அம்மா வந்தபிறகு சொத்து தருவதாக உங்கள் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.5.லோகநாயகி இறந்துபோன சுப்புராஜ் நடத்தி வந்த கடையை அவருடைய மனைவியும், மாமியாரும் வந்து நடத்துவார்கள் என்று சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். லோகநாயகி 1 ஆம் எதிரியின் அண்ணனை ஒரு முறை பார்த்தேன் என்று உங்கள் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 1 ஆம் எதிரி கனகராஜ் சுப்புராஜ் கடைக்கு சென்று பேசுவார் என்று கூறவில்லை என்று சொன்னால் அவ்வாறு செல்லவில்லை, சுப்புராஜ் வீட்டிற்கு சென்று வருவார். உங்களுக்கு முன்னால் புலன் விசாரணை செய்த புலன் விசாரணை அதிகாரி காலடி தடத்தை எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். சா.பொ.2 முதல் சா.பொ.4 வரையிலான பொருட்களை தடயவியல் அறிவியல் துறைக்கு அனுப்பி கைரேகை உள்ளதா என தெரிந்துகொள்ளவில்லை என்று சொன்னால் சரிதான். 4 ஆம் எதிரி அழகுலட்சுமியை திரேக பரிசோதனை செய்யவில்லை என்று சொன்னால்

சரியல்ல, AWPS காவல் பெண் காவலர் திரேக பரிசோதனை செய்தார். அந்த இடத்தில் வைத்து நீங்கள் சான்றுபொருட்களை கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல, சாட்சிகள் முன்வராததால் கைப்பற்றவில்லை. கைப்பற்றப்பட்ட புகைப்படங்களின் உண்மை தன்மையை அறிய ஆய்விற்கு நீங்கள் அனுப்பவில்லை என்று சொன்னால் சரிதான். நீங்கள் 1 முதல் 4 எதிரிகளை சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் கைது செய்யப்படவில்லை என்றும், அவர்களிடமிருந்து எந்த சான்று பொருட்களையும் கைப்பற்றப்படவில்லை என்றும், நீங்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சான்றுபொருட்கள் வழக்கிற்காக உருவாக்கப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. சா.பொ.8 மற்றும் சா.பொ.12. அருவாட்கள் அதை நீங்கள் கைப்பற்றி பேக் செய்து சீல் செய்யவில்லை என்று சொன்னால் கைப்பற்றினேன், சீல் வைக்கவில்லை. ஒப்புதல் வாக்குமூலங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல, ஒரு எதிரிக்கு வெளியே எடுத்தோம், மற்ற மூன்று எதிரிகள் காவல் நிலையத்தில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். கைப்பற்றுதல் மகஜர் ஒன்று கையில் எழுதியதாகவும், மற்றவைகளின் பிரிண்ட் எடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் எந்த சாட்சியங்களையும் விசாரணை செய்யவில்லை என்றும், சாட்சிகளின் விசாரணை வாக்குமூலத்தை வழக்கிற்கு ஏற்றாற்போல் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. தட்டச்சு செய்யப்பட்ட வாக்குமூலங்களில் அடிக்குறிப்புகள் இல்லை என்று சொன்னால் சரிதான், நான் விசாரித்துதான் வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். வழக்கு பதிவு செய்யப்பட்டு, இரண்டு வருடங்கள் ஆனபிறகு மேல்

அதிகாரியின் அழுத்தத்தின் காரணமாக சில பொய்யான தகவல்களின் அடிப்படையில் வழக்கு ஆவணங்களை ஜோடித்துள்ளீர்கள் என்றும், எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

முடியும் நேரம் **4.25** மணி

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.